

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.9.2024) அண்மையில் மறைவெய்திய செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஓய்வு பெற்ற இணை இயக்குநர் எல்.மணிமாறன் அவர்களின் சென்னை, கோபாலபுரத்திலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

### தி.மு.க. மகளிர் அணி சார்பில்

# திருச்சியில் ‘கலைஞர் 100 வினாடி - வினா’ போட்டி!

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

திருச்சி, செப். 20 -

திருச்சியில் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் வினாடி - வினா போட்டியை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்.

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் தி.மு.க. மகளிர் அணி மற்றும் கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், திராவிட இயக்க வரலாற்றையும், கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும்,நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் நடைபெறும் ‘கலைஞர் 100 வினாடி - வினா’ போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டி நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைத்தார்.

இந்த வினாடி வினா போட்டி, 18 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் 18 வயதிற்கு மேலானவர்களுக்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, திருச்சி மண்டலத்திற்குட்பட்ட திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வினாடி வினா போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியினை தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி லெனின் தொகுத்து வழங்கினார்.

இந்த போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு தலா ரூ. 10 லட்சமும், 2ஆம் இடத்தை பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.6 லட்சமும், 3ஆம் இடத்தைப் பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.3 லட்சமும் ரொக்கப் பரிசாக வழங்கப்படுகிறது. வெவ்வேறு சுற்றுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குத் திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் பரிசுகளை வழங்குகிறார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர மேயர் அன்பழகன், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், துணை செயலாளர் பவானி ராஜேந்திரன், மாநில தொண்டர் அணி துனை செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மதனா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மோடி தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி அரசின் நூறு நாட்கள் நிறைவு!

# மக்களுக்கு கசப்பையும், கார்ப்பரேட் கூட்டாளிகளுக்கு இனிப்பையும் தருவதாக இருக்கிறது!

## “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, செப்.20-

மோடி அரசு, செய்ய வேண்டியவற்றை செய்யாமலும், செய்யக்கூடாததை செய்தும் நாட்களை கடத்தி வருகிறது. இது மக்களுக்கு கசப்பையும், கார்ப்பரேட் கூட்டாளிகளுக்கு இனிப்பையும்தருவதாகவே இருக்கிறது என “தீக்கதிர்” நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி அரசு மூன்றாவது முறையாக பதவி யேற்று நூறு நாள் முடிந்ததையொட்டி ஒன்றிய உள்துறை அமைச்சர் சாதனை கையேட்டை வெளியிட்டுள்ளார். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி என்பது இந்த ஆட்சியின் அலங்கோலங்களை எடுத்துக்காட்டுவதாகவே அமைந்துள்ளது.



தீக்கதிர்

2024 செப்.19 வியாழக்கிழமை

நூறு நாள் ஆட்சியும், பூஜ்ய மதிப்பெண்ணும்

நரேந்திர மோடி தலைமையிலான பாஜக கூட்டணி அரசு மூன்றாவது முறையாக பதவியேற்று நூறு நாள் முடிந்ததையொட்டி ஒன்றிய உள்துறை அமைச்சர் சாதனை கையேட்டை வெளியிட்டுள்ளார். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி என்பது இந்த ஆட்சியின் அலங்கோலங்களை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்துள்ளது.

பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பை இது வரை துவங்காததற்கு என்ன காரணம் என்று கேட்க கொரோனா பரவலை கைகாட்டுகிறார் அமித்ஷா. கொரோனா பரவல் முடிந்துவிட்ட...

பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பை இது வரை துவங்காததற்கு என்ன காரணம் என்று கேட்க கொரோனா பரவலை கைகாட்டுகிறார் அமித்ஷா. கொரோனா பரவல் முடிந்துவிட்டது என்று ஒன்றிய அரசே ஒப்புக் கொண்ட பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பை துவங்க மறுப்பது ஏன்? என்ற கேள்விக்கு அவரிடம் பதில் இல்லை. வழக்கம் போல விரைவில் துவங்கும் என்ற வழக்க மான பல்லவியையே பாடியுள்ளார் ஒன்றிய அமைச்சர்.

மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பும் சேர்ந்து நடத்தப்படுமா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு கணக்கெடுப்பு பணி துவங்கும் போது தெரியும் என்று மழுப்பியுள்ளார் அமித்ஷா.

மணிப்பூரில் ஓராண்டுக்கும் மேலாக வன் செயல்கள் நடந்து வரு கின்றன. கடந்த வாரம் கூட பெரும் வன்முறை வெடித்தது. ஆனால் கடந்த மூன்று நாட்களாக வன்முறை இல்லை என்பதையே பெரும் சாதனை யாக கூறியுள்ளார் அமித்ஷா. இது வரை பிரதமர் நரேந்திர மோடி மணிப்பூர் பக்கம் எட்டிப் பார்க்கவே இல்லை. யாருடனும் பேச்சு வார்த்தை நடத்தவில்லை. ஆனால் மூன்று நாட்கள் மோதல் இல்லை என்பதையே தங்களுடைய மூன்றாவது முறை ஆட்சியின் பெரும் சாதனையாக பீற்றிக் கொள்கிறார் அமித்ஷா.

ஆனால் தங்களது ஆட்சிக் காலம் முடிவதற்குள் ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவோம் என்றும் வக்பு வாரிய சட்டத்திருத்தத்தை விரைவில் நிறைவேற்று வோம் என்றும் கூறுகிறார் அமித்ஷா. இந்த திட்டங்கள் ஒன்றிய அரசின் மதப் பகைமை அடிப்படையில் கொண்டு வரப்படுபவை. இதற்கு காட்டும் அவசரத்தை சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் ஏன் காட்ட மறுக்கிறது மோடி அரசு.

முதல் முறை ஆட்சிக்கு வந்தபோது அளித்த வாக்குறுதிகளை கூட நரேந்திர மோடி இதுவரை நிறைவேற்றவில்லை. வேளாண் விளை பொருட்களுக்கு உற்பத்திச் செலவை விட ஒன்றரை மடங்கு கூடுதல் விலை தருவோம் என்றார்.

ஆனால் இப்போதும் கூட குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்தியுள்ளோம் என அடக்கி வாசிக்கிறார் அமித்ஷா.

மொத்தத்தில் செய்ய வேண்டியவற்றை செய்யாமலும், செய்யக் கூடாததை செய்தும் நாட்களை கடத்தி வருகிறது மோடி அரசு. மூன்றாவது தவணையின் நூறாவது நாளும் மக்களுக்கு கசப்பையும், கார்ப்பரேட் கூட்டாளி களுக்கு இனிப்பையும்தருவதாகவே இருக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 24 / 2024-25 / தவஅ / நாள்: 12.09.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால், 2024-25-ம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **நாகப்பட்டினம்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணி, மயிலாடுதுறை** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணி மற்றும் திருவாரூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணிக்கு** இணையவழியில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **22.10.2024 அன்று 14.00 மணி** வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 23.09.2024 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி-20**

செ.ம.தொ.இ/3741/ஒப்பந்தப்புள்ளி/2024




தலைமைச் செயலகத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் பல்வேறு இயக்ககங்களின் இயக்குநர்களுடன் மானியக் கோரிக்கை அறிவிப்பின் முன்னேற்றப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. பள்ளிகள் அளவிலான புகார்கள் கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அறிவுறுத்தினார். பள்ளிக் கல்வித்துறை அரசுச் செயலாளர் மதுமதி, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் நரேஷ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக மேலாண்மை இயக்குநர் சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இதுவரை ரூ.6 கோடியே 7 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 7 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 19–09–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | வீ. துரைச்சாமி, சுப்புராஜ் நகர், 8வது வார்டு, போடிநாயக்கனூர், தேனி | 25,000/– |
| 2. | எஸ்.ரஹீம், நடுத் தெரு, பெரியகலையம்புத்தூர், நிகரப்பட்டி, திண்டுக்கல் | 25,000/– |
| 3. | எம். அப்துல் ஒஜிர், மேற்கு தெரு, மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம். | 25,000/– |
| 4. | மா. தர்மராஜ், சின்ன செட்டிக்குறிச்சி, அருப்புக்கோட்டை, விருதுநகர் | 25,000/– |
| 5. | எம்.கண்மணி சுப்பையா, சமத்துவபுரம், வள்ளியூர், இராதாபுரம், திருநெல்வேலி | 25,000/– |
| 6. | எஸ்.சந்தனமாரி, ரத்தினாபுரி, காயல்பட்டணம், திருச்செந்தூர், தூத்துக்குடி | 25,000/– |
| 7. | ப.செல்வராஜ், அந்தோணியார் குருசடி சமீபம், மணக்குடி, கன்னியாகுமரி | 25,000/– |
| 8. | ஏ.கே.கெங்காதரம், நடுத் தெரு, சிந்தலப்பட்டடை, நகரி, ஆந்திர மாநிலம் | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### பீகாரில் பட்டியலின

# மக்களின் வீடுகள் எரிப்பு!

## ராகுல் காந்தி எம்.பி. கடும் கண்டனம்!

புதுடெல்லி, செப்.20-

பீகாரில் பட்டியலின மக்களின் வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவத்துக்கு காங்கிரஸ் முன்னணி தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி கடும்



கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து தவிக்கிறார்கள் என தெரிவித்துள்ள அவர், உரிய நிவாரணத்தை மாநில அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இந்த விவகாரத்தில் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்று தர வேண்டும் என்று ராகுல்காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### வேலூர் மாவட்டம் – கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியம் –

# பி.கே.புரம் ஊராட்சியில் தி.மு.க. பவளவிழா - முப்பெரும்விழா!

## அய்யா சிங்கராயர் – அ.இலக்குமதி சிறப்புரை!

வேலூர், செப்.20-

வேலூர் மாவட்டம் கீ. வ. குப்பம் மேற்கு ஒன்றியம். பி.கே.புரம் ஊராட்சி பெருமாங்குப்பம், கூட்டு சாலை பேருந்து நிலையம் அருகில். மாவட்ட இலக்கிய அணி, மாவட்ட திராவிட நட்பு கழகம், முரசொலி தமிழ் மன்றம் ஆகியோர் இணைந்து நடத்தும் தி.மு.க. பவள விழா - முப்பெரும் விழாவை முன்னிட்டு, வரும் 22.9.2024 ஞாயிறு அன்று மாலை 5.00 மணியளவில், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா.பரிமளம் தலைமையில் நடைபெறுகிறது. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநில துணைச் செயலாளர் சி.கோபி வரவேற்புரையாற்றுகிறார்.

கோ.இளங்கோ, வழக்கறிஞர் எஸ்.மோகன்ராஜ் ப.கருணாநிதி, சகா மணி கண்டன், ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.மோகன், வீரா. குமரன் கே.சுரேஷ், பங்கடை கருணா, ஆசிரியர் இரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட திராவிட நட்பு கழக செயலாளர் சா.குமரன் அறிமுக உரையாற்றுகின்றார்.

பேரறிஞர் அண்ணாவின் அடையாளம் தமிழும், தமிழ்நாடும் எனும் தலைப்பில் மாநில திராவிட நட்பு கழக செயலாளர் அய்யா சிங்கராயர், மாட்சிமையான முனைவர், தமிழ் பேராசிரியர் அ. இலக்கு மதி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக ஒருங்கிணைந்த கீ. வ.குப்பம் ஒன்றியங்களின் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.சீதாராமன், மத்திய ஒன்றிய செயலாளர் எல்.இராமச்சந்திரன் (ஒன்றிய குழு தலைவர்) கிழக்கு ஒன்றிய செயலாளர் இரா. முருகேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.கே.ஆர். சுந்தரவடிவேலு, பொதுக்குழு உறுப்பினர்கள் கே.தயாளமூர்த்தி, வி.டி.சிவகுமார் முன்னாள் ஒன்றிய செயலாளர் விடி.ஜெயக்குமார், முன்னாள் எல்டி வங்கி தலைவர் வெ.ஜெயராஜ், இரு ஒன்றிய அவைத்தலைவர்கள், எம். அசோக் குமார், இரா.தாமோதரன், ஒன்றிய குழு துணை தலைவர் பாரதி வெங்கடேசன், மாவட்ட கவுன்சிலர் கவிதா சுதாசேகர், வழக்கறிஞர் ஜி. விஜயகுமார்.ஒன்றிய கழக நிர்வாகிகள், ஏ. ஏழ்மைநாதன், நளினி ராமமூர்த்தி, கட்டுக்கல் பாஸ்கர், கு.குப்பன், சி.மார்க்கபந்து, கீழ் புதூர் வெங்கடேசன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் . பாண்டு, தா. இரவி, சிவகாமி பாண்டியன், மருத்துவர் கோவி. தூயவன், இராதிகா, கேசவன், தலைவர் வி.எத்திராசன் தொ.மு.ச. சி.மதியழகன், முருகேசன், சா.சிவகுமார், தேனா வங்கி வசந்தன், தா.மேகநாதன், ஆர். வேல்முருகன், கே.சிரிதர், ஆர்.ராஜிவ் காந்தி, பாலா. ராஜேஷ், ஷியாம். சேத்துவண்டை ஆர்.சத்யா, திருஞானம், சாமுவேல், மணிவண்ணன், மகேந்திரன், மு.பிரபு, கவிஞர். சுடர் வெங்கடேசன், சே. கபில்தேவ் மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

இறுதியாக ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் ப.விஜய் நன்றி கூறுகிறார்.